

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 04 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 28 – செவ்வாய்க்கிழமை 13 ஆகஸ்டு 2024 – வெளியீடு 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 04 : Thiruvalluvar Year - 2055 - Aadi 28 - Tuesday 13 August 2024 - Dak 10 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (12.8.2024) சென்னைப் பல்கலைக்கழகத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" நிகழ்ச்சியில், கல்லூரி மாணவ, மாணவியர்கள் போதைப்பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) செள. டேவிட்சன் தேவாசீர்வாதம், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ. அருண், அமலாக்கப் பணியகம் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் முனைவர் அ. அமல்ராஜ், அரசு மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.8.2024) சென்னைப் பல்கலைக்கழகத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோதக் கடத்தலை ஒழிப்பதில் சிறப்பாக பணியாற்றிய காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு 2024–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் சிறப்பு பதக்கங்களை வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) செள. டேவிட்சன் தேவாசீர்வாதம், சென்னைப் பெருநகர காவல் ஆணையர் ஆ. அருண், அமலாக்கப் பணியகம் – குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் முனைவர் அ. அமல்ராஜ், அரசு மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 4 புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டதற்கான ஆணைகள் வழங்கல்!

# ரூ.1962.42 கோடி செலவில் திட்டப்பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் தொடங்கிவைத்து – அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஆக. 13 –**

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.769.97 கோடி செலவிலான 103 முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, ரூ.1192.45 கோடி மதிப்பீட்டிலான 30 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்தின் பயன்பாட்டிற்காக 68 புதிய வாகனங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.08.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூ.461.69 கோடி செலவில் 3 பணிகள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.167.28 கோடி செலவில் 9 பணிகள், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் ரூ.109.58 கோடி செலவில் 79 பணிகள், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.28.42 கோடி செலவில் 11 பணிகள், பேரூராட்சிகளின் இயக்ககத்தின் சார்பில் ரூ.3 கோடி செலவில் 1 பணி என மொத்தம் ரூ.800.75 கோடி செலவிலான 104 முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.1153.27 கோடி மதிப்பீட்டிலான 19 பணிகள், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சார்பில் ரூ.35.72 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 10 பணிகள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.3.46 கோடி மதிப்பீட்டிலான 1 பணி, என மொத்தம் ரூ.1192.45 கோடி மதிப்பீட்டிலான 30 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.08.2024) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பெருநகர சென்னை மாநகராட்சி, பேரூராட்சிகளின் இயக்ககம் ஆகியவற்றின் சார்பில் மொத்தம் ரூ.769.97 கோடி செலவிலான 103 முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றின் சார்பில் மொத்தம் ரூ.1192.45 கோடி மதிப்பீட்டிலான 30 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக நாகர்கோவில் மாநகராட்சியில் 3,20,000 மக்கள் பயனடையும் வகையில் ரூ.296.08 கோடி செலவிலான குடிநீர் அபிவிருத்தி திட்டம்;

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியத்தைச் சார்ந்த வேலகாபுரம் மற்றும் மாமண்டூர் ஊராட்சிகளிலுள்ள 4720 மக்கள் பயனடையும் வகையில் 10 குடியிருப்புகளுக்கான ரூ.3.18 கோடி செலவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

தேனி மாவட்டம், கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை, ஆண்டிபட்டி மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1.58 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 250 ஊரக குடியிருப்புகளுக்கான வைகை அணையை நீராதரமாகக் கொண்டு ரூ.162.43 கோடி செலவிலான கூட்டுக் குடிநீர் திட்டம்;

என மொத்தம் 461.69 கோடி ரூபாய் செலவில் 261 ஊரக குடியிருப்புகளுக்கான 3 குடிநீர்த் திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல்.**

**புவியிடம் சார்ந்த தகவல் அமைப்பு மேலாண்மை மையம்**

சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 17 கோடியே 80 இலட்சம்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு!"

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கல்லூரி மாணவ - மாணவியர் உறுதிமொழி ஏற்பு!

**சென்னை, ஆக. 13 –**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (12.8.2024) சென்னைப் பல்கலைக்கழகத்தில் காவல் துறை சார்பில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" நிகழ்ச்சியில், கல்லூரி மாணவ, மாணவியர்கள் போதைப்பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர். மேலும், மாநிலத்தில் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோதக் கடத்தலை ஒழிப்பதில் சிறப்பாக பணியாற்றிய காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் காவலர் சிறப்பு பதக்கங்களை வழங்கி கௌரவித்தார்.**

தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் பற்றி விவரங்கள்:

2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 அன்று நடைபெற்ற மாநில அளவிலான போதைப்பொருள் ஒழிப்பு மாநாட்டில், முதலமைச்சர் அவர்கள் "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" உருவாக்கிட வேண்டும் என இலக்கினை நிர்ணயித்தார். அதற்குத் தேவையான போதைப் பொருட்கள் ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு காவல்துறை சார்பில் 11.8.2022 அன்று முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு உறுதிமொழி ஏற்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து காவல் துறை மூலமாக போதைப் பொருட்களை கண்டறிந்து ஒழித்திட தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாநிலமெங்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டிலும் ஆகஸ்டு 11 அன்று "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தினை அடைந்திட தமிழ்நாடு காவல்துறை மற்றும் அமலாக்கப் பணியகம், குற்றப் புலனாய்வு துறை ஆகியவை போதைப்பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் சட்டவிரோத விற்பனை மற்றும் கடத்தலுக்கு எதிராக தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. கடந்த ஆண்டில் இது தொடர்பாக மொத்தம் 10,256 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவற்றில் 14,770 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து சுமார் 23,364 கிலோ கஞ்சா, 0.953 கிலோ ஹெராயின், 39,910 மாத்திரைகள் மற்றும் 1239 கிலோ மற்ற போதைப் பொருட்கள் (கஞ்சா சாக்லேட், மெத்தாபிடமைன், ஆம்பிடாமைன் மற்றும் மெத்தாகுலான்) கைப்பற்றப் பட்டுள்ளது,

நடப்பு 2024 ஆண்டில், ஜூன் மாதம் வரை மொத்தம் 4,522 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 7,123 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் விளைவாக 11,081 கிலோ கஞ்சா, 74,016 மாத்திரைகள் மற்றும் 283.70 கிலோ மற்ற போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபட்டு லாபம் பெற்ற குற்றவாளிகளுக்கு எதிராக நீதி விசாரணை நடத்தப்பட்டு,

தொடர்ச்சி 4ஆம் பக்கம்